மாவட்ட ஆட்சியர்களிடம்

மழை நிலவரம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்!

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதப்படுத்த அறிவுறுத்தல்!

சென்னை, டிச.4-

வடகிழக்கு பருவமழை தொடங்கியதை அடுத்து பலத்த மழை பெய்து வருகிறது. இதனைத் தொடர்ந்து தென்கிழக்கு வங்கக் கடலில் மிக்ஜாம் புயல் நேற்று உருவாகியது. இப்புயல் நாளை கரையைக் கடக்க இருக்கிறது. இதனால் வடதமிழகத்தில் இன்றும், நாளையும் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்ட ஆட்சியர்களுடன் தொலைபேசியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தினார்.

தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவி வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. வங்கக் கடலில் புயல் உருவாகி உள்ள நிலையில் தமிழ்நாட்டில் இன்றும் (டிச. 4) மற்றும் நாளையும் (டிச. 5) மிக கன மழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் வரும் 5ம் தேதி வரை ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக புயல் எச்சரிக்கை எதிரொலியாக 9 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. புயல் முன்னெச்சரிக்கை தொடர்பாக நேற்று முன்தினம் சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர்கள், 12 மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது அவர்கள் செய்யவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து உரையாற்றினார்.

முன்னதாக அமைச்சர்கள், தி.மு.க.வை சேர்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட தி.மு.க. அமைப்புகளில் உள்ள அனைத்து நிர்வாகிகள் தத்தமது பகுதிகளில் இருந்து மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை செய்யுமாறு அறிக்கை ஒன்றை முதல்வர் அவர்கள் வெளியிட்டிருந்தார்.

கள பணியில் அமைச்சர்கள்

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலை அடுத்து மழைபெய்யும் இடங்களில் அமைச்சர்கள் களத்தில் இறங்கி மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளில் தண்ணீர் வடிய உடனடி நடவடிக்கை மேற்கொண்டனர். ஆங்காங்கே மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாட்டில் மழை நிலவரம் தொடர்பாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களிடமும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைபேசி வாயிலாக நேற்று (3.12.2023) காலை கேட்டறிந்தார்.

மேலும், மழையால் பாதிப்பு எதுவும் ஏற்படாத வகையில், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கும்படியும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களிடமும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.

நான்கு மாநில சட்டமன்றத் தேர்தல் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் -

வளமும், வளர்ச்சியும் அளிப்பதாக ஆட்சிக்காலம் அமையட்டும்!

வெற்றி பெற்ற கட்சிகளுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, டிச.4-

நான்கு மாநில சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில், "அனைத்து பிரிவு மக்களுக்கும் நல்ல வளர்ச்சியும், வளமும் அளிப்பதாக ஆட்சிக்காலம் அமையட்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

தெலங்கானா, மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ராஜஸ்தான் மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ள கட்சிகளுக்கு எனது வாழ்த்துகள்.

அவர்களது ஆட்சிக்காலம் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கும் நல்ல மாற்றத்தையும், வளர்ச்சியையும் வளத்தையும் அளிப்பதாக அமைய விழைகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

உருவானது 'மிக்ஜாம்'

புயல் நாளை கரையைக் கடக்கும்!

சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, டிச.4-

வங்கக் கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுந்த தாழ்வு மண்டலம் மிக்ஜாம் புயலாக மாறியது என்றும், சென்னையில் இருந்து 310 கி.மீ. தென்கிழக்கு திசையில் புயல் நிலைகொண்டுள்ளது என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. துறைமுகங்களில் 3ம் எண் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நேற்று மிக்ஜாம் புயலாக வலுப்பெற்றது. சென்னையில் இருந்து 310 கி.மீ. தென்கிழக்கு திசையில் புயல் நிலை கொண்டுள்ளது. வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெற்று வட தமிழகத்தை நோக்கி புயல் நகரும். நாளை (5ம் தேதி) முற்பகலில் நெல்லூர் மசூலிப்பட்டினம் இடையே புயலாக கரையை கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புயல் காரணமாக சென்னை, கடலூர், எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி ஆகிய துறைமுகங்களில் 3ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

மேலும் நாகை, காரைக்கால், பாம்பன், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் 2ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. புயல் எச்சரிக்கையைத் தொடர்ந்து சென்னையில் அமைச்சர், மாநகராட்சி மேயர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளும் தயார் நிலையில் இருப்பதாக அரசு சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், புயல் எச்சரிக்கை காரணமாக செம்பரம்பாக்கம் ஏரியை

தொடர்ந்து கண்காணிப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திறந்து விடப்படும் உபரி நீர் அளவு 500 கன அடி ஆக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த இரு நாட்களாக 3 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்ட நிலையில் 1, 500 கனஅடியாக குறைந்துள்ளது. உபரி நீர் வெளியேற்றம் காரணமாக அடையாறு ஆற்றின் கரையோர மக்களுக்கு விடப்பட்டுள்ளது.

இதனால் சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் இன்றும், நாளையும் மிக கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனவே, பொதுமக்கள் ஒருசில நாட்களுக்கு தேவையான உணவு, நீர் மற்றும் மருந்துகளை கையிருப்பில் வைத்துக் கொள்ளுமாறு தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று (4ம் தேதி) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. புயல் காரணமாக இன்று கன மழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்துள்ள நிலையில், மாணவர்களின் நலன் கருதி இன்று (4ம் தேதி) சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள அனைத்து பள்ளிகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்படுவதாக அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் அறிவித்துள்ளனர்.

மிக்ஜாம் புயல்: முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து

அவசர கால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு - அலுவலர்களுக்கு அறிவுரை!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் வழங்கினார்!

சென்னை, டிச.4-

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் உள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், தற்போது "மிக்ஜாம்" புயலாக வலுவடைந்து உள்ளது. இது சென்னைக்கு தென்கிழக்கே சுமார் 310 கி.மீ. தொலைவில் நிலை கொண்டுள்ளது என்றும், இது வடமேற்கு திசையில் நகர்ந்து தெற்கு ஆந்திர பிரதேச மற்றும் அதனை ஒட்டியுள்ள வட தமிழக கடலோர பகுதியினை 04.12.2023 அன்று முற்பகல் வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும், அதன் பிறகு வடக்கு திசையில் நகர்ந்து 05.12.2023 அன்று முற்பகல் தெற்கு ஆந்திர பிரதேசத்தின் கடற்கரையை நெல்லூர் மற்றும் மசூலிப்பட்டினத்திற்கும் இடையே மணிக்கு 80 முதல் 100 கி.மீ. பலத்த காற்றுடன் புயலாக கரையை கடக்கக்கூடும் என எதிர்பார்ககப்படுகிறது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று (03.12.2023) காலை 8.30 மணி வரை 30 மாவட்டங்களில் 1.14 செ.மீ. மழை பெய்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் 2 மழை மானி நிலையங்களில் மிக கனமழை பதிவாகியுள்ளது. மேலும், பின்வரும் விவரப்படி 28 மழைமானி நிலையங்களில் கனமழை பதிவாகியுள்ளது.

மாவட்டம் கனமழை பதிவான மழைமானி நிலையங்களின் எண்ணிக்கை வருமாறு:-

1. சென்னை - 13, 2. திருவள்ளூர் - 6, 3. திருநெல்வேலி - 3, 4. தென்காசி - 4,

5. செங்கல்பட்டு - 1, 6. இராணிப்பேட்டை - 1. மொத்தம் - 28

வங்கக்கடலில் உருவாகியுள்ள புயல் சின்னம் காரணமாக, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

03.12.2023 - மிக கன மழை - திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, செங்கல்பட்டு, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள். (07 மாவட்டங்கள்)

கனமழை - வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். (09 மாவட்டங்கள்)

04.12.2023 - மிக கனமழை - திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், வேலூர், இராணிப்பேட்டை, செங்கல்பட்டு, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள். (08 மாவட்டங்கள்)

கனமழை - கள்ளக்குறிச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் (02 மாவட்டங்கள்)

கடலோர மாவட்டங்களுக்கு பலத்த காற்று தொடர்பான எச்சரிக்கை

03.12.2023 - கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மணிக்கு 50 முதல் 70 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

04.12.2023- செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மணிக்கு 60 முதல் 80 கி.மீ. வேகத்தில் சூறைக் காற்று வீசக்கூடும். கடலூர் மற்றும் விழுப்புரம், மாவட்டங்களில் மணிக்கு 50 முதல் 70 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின் பேரில் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாதிப்பிற்குள்ளாகக் கூடிய பகுதிகளில் இருந்து பொதுமக்களை முன் கூட்டியே பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களும், 4967 இதர நிவாரண முகாம்களும் அனைத்து அடிப்படை வசதிகளுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கடலோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 437 முன்னெச்சரிக்கை அமைப்புகள் மூலம் மீனவர்களுக்கும், பொதுமக்களுக்கும் எச்சரிக்கை தகவல்கள் வழங்கப்பட்டு வருகிறது.

பொதுவான எச்சரிக்கை நடைமுறை மூலம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை குறுஞ் செய்திகள் அனுப்பவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புயலின் காரணமாக, பலத்த காற்று மற்றும் கன மழை பெய்யக்கூடும் என்பதால், பொதுமக்கள் தங்களை பாதுகாத்து கொள்ள செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

புயலின் காரணமாக 118 இரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

மீனவர்களுக்கு உரிய நேரத்தில் முன்னெச்சரிக்கை வழங்கியதன் காரணமாக, கிழக்கு கரையில் இருந்த 930 படகுகள் பாதுகாப்பாக கரை சேர்ந்துள்ளன. மேலும், 57 படகுகள் கிருஷ்ணாம்பட்டினம், ஜுவாலதின் மற்றும் ராமய்யா பட்டினம் மீன்பிடி துறைமுகங்களில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. 403 படகுகள் மேற்கு கரையில் பாதுகாப்பாக உள்ளன.

தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் 350 வீரர்கள் கொண்ட 14 குழுக்கள் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையின் 225 வீரர்கள் கொண்ட 9 குழுக்கள் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் சென்னை மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள விரைந்துள்ளனர்.

மாநில அவசரகால செயல்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அளவிலான அவசரகால செயல்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் கூடுதலான அலுவலர்களுடன் இயங்குகின்றன.

புயல், கனமழை தொடர்பான முன்னெச்சரிக்கை தகவல்கள் TNSMART செயலி மூலமாகவும், Twitter, Facebook உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மூலமாகவும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டு ள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கென நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் தொடர்புடைய பகுதிகளில் முகாமிட்டு முன்னெச்சரிக்கை, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சென்னையில் 162 நிவாரண மையங்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளது. 1 நிவாரண முகாமில் 348 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தாழ்வான பகுதிகளில் மழை நீரை வெளியேற்ற 714 நீர் இறைப்பான்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களது ஆய்வின் போது, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநர், சி.அ.ராமன் ஆகிய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

மிக்ஜாம் புயல்: சென்னை- திருவள்ளூர் - காஞ்சிபுரம் - செங்கல்பட்டு மாவட்டங்களில்

தனியார் நிறுவனங்களுக்கு அரசு அறிவுரை!

அத்தியாவசியமாகத் தேவைப்படும் பணியாளர்களை மட்டும் கொண்டு செயல்பட வேண்டுகோள்!

சென்னை, டிச.4-

மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களைச் சார்ந்த தனியார் நிறுவனங்களுக்கு (Private Companies) அறிவுரை வழங்கி அரசு, நேற்று விடுத்த அறிவிப்பு வருமாறு:-

மிக்ஜாம் புயல் நேற்று பிற்பகல் 5.30 மணி நிலவரப்படி தென்மேற்கு வங்கக்கடலில், புதுச்சேரியில் இருந்து 240 கி.மீ. கிழக்கு தென்கிழக்காகவும், சென்னையில் இருந்து 210 கி.மீ. தென் கிழக்காகவும், நெல்லூரில் இருந்து 330 கிமீ தெற்கு தென்கிழக்காகவும் நிலை கொண்டுள்ளது. இது மேலும் வலுவடைந்து இன்று (4.12.23 திங்கட்கிழமை) முற்பகல் தமிழ்நாட்டின் வடக்கு கடற்கரைப் பகுதியை நோக்கி நகர்ந்து வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் மிக கனத்த மழையுடன் புயல் காற்றும் வீச வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புயல் கரையைக் கடக்கும் பொழுது சாலைகளில் மழையின் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்படவும், காற்று வேகத்தின் காரணமாக மரங்கள் சாய்ந்து விழவும், மின்கடத்திக் கம்பிகள் அறுந்து விடவும் வாய்ப்பு இருப்பதன் காரணமாக பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய அறிவுரைகளை தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் செய்தியாக வெளியிட்டுள்ளது. அரசும் அத்தியாவசியப் பணிகளான காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், உள்ளாட்சி அமைப்புகள், மருத்துவமனைகள், மின்சாரம், பால், குடிநீர் விநியோகம், உணவகங்கள் போன்ற அமைப்புகளின் பணியாளர்களைத் தவிர இம் மாவட்டங்களில் செயல்படும் பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு இன்று ஒரு நாள் பொது விடுமுறை என அறிவித்துள்ளது.

இந்நிலையில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள தனியார் நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் இயன்றவரை தங்கள் பணியாளர்களை வீட்டிலிருந்தபடியே பணி செய்ய (Work From Home) அறிவுறுத்துமாறும் தவிர்க்க இயலாத நிலையில் அத்தியாவசியமாகத் தேவைப்படும் பணியாளர்களை மட்டும் கொண்டு செயல்படவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு அவ்வறிக்கையில் அரசு குறிப்பிட்டுள்ளது.

ஆட்சியர் ச.உமா தலைமை! கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலை!

நாமக்கல் மாவட்டத்தில் மாணவர்களுக்கு மிதிவண்டிகள்!

அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார்!

நாமக்கல், டிச. 4-

நாமக்கல் நகராட்சி, அரசினர் மேல்நிலைப்பள்ளி (தெற்கு) மற்றும் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் நாமக்கல் மாவட்டத்தில் 2023-2024 ஆம் கல்வி ஆண்டில் 5,206 மாணவர்களுக்கும், 5,904 மாணவிகளுக்கு தலா ரூ.4,900/ மதிப்பிலும் என ஆக மொத்தம் ரூ.5.36 கோடி மதிப்பீட்டில் 11,110 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கும் பணியினை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நடை பெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு அரசினர் மேல்நிலைப்பள்ளியில் (தெற்கு) 150 மாணவர்களுக்கும், அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 342 மாணவிகளுக்கும் என 492 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, முதன்மை கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் ச.பாலகிருஷ்ணன், மாவட்ட கல்வி அலுவலர் ஆர்.இரவிசந்திரன், உள்ளாட்சிப் பிரதிநிதி கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதி குட்பட்ட இரா கி பேட்டை ஒன்றியம் விடியங்காடு ஊராட்சி சமுதாயகூடத்தில் மழையால் பாதிக்கப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ள பழங்குடியின மக்களுக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம் எல் ஏ உணவு உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினர் அருகில் ஒன்றிய செயலாளர் சி.என்.சண்முகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் உள்ளனர்

தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களில் இயங்கி வரும் "நேரு யுவகேந்த்ராமற்றும் ஒன்றிய அரசு இணைந்து மாநில அளவில் இளைஞர், இளம்பெண்களுக்கு இடையேயான பல்வேறு போட்டிகள் சென்னை மீனம்பாக்கம் எம்.ஏ. ஜெயின் கல்லூரியில் நடைபெற்றது. இதில்வெற்றிபெற்ற இளைஞர்களுக்கு பரிசும் சான்றிதழ்களை கழக வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி. வழங்கி, சிறப்புரையாற்றினார்.